# வாக்காளர் பட்டியலில் உங்கள் பெயரைப் பதிவு செய்வதற்கும் வாக்களிப்பதற்குமான **ஒரு வழிகாட்டி**

நீங்கள் ஒரு ஆஸ்திரேலியப் பிரஜையாகவும் 18 அல்லது அதற்கு மேற்பட்ட வயதுடையவராகவும் இருப்பதனால் வாக்காளர் பட்டியலில் உங்களை பதிவு செய்யவும் ஃபெடரல் தேர்தல்களில் வாக்களிக்கின்ற உரிமையும் கடமையும் உங்களுக்கு உள்ளது. வாக்காளர் பட்டியலில் பதிவு செய்வதும் வாக்களிப்பதும் கட்டாயமாகும். நீங்கள் வாக்களிக்கவில்லையாயின் உங்களுக்கு அபராதம் விதிக்கப்படலாம்.

## நாங்கள் எவ்வாறு உதவுகிறோம்?

காமன்வெல்த் வாக்காளர் பட்டியலைப் பராமரிப்பதும், ஃபெடரல் தேர்தல்கள், இடைத் தேர்தல்கள் மற்றும் கருத்துக்கணிப்பீடுகள் என்பவற்றை நடத்துவதும் ஆஸ்திரேலிய தேர்தல் ஆணையத்தின் (AEC) பொறுப்பாகும்.

மாநில, எல்லைப் பிராந்திய மற்றும் உள்ளூராட்சித் தேர்தல்களை AEC நடத்துவதில்லை. இவை வேறு தேர்தல் அதிகாரங்களால் நடத்தப்படும்.

## பெயரைப் பதிவு செய்தல்

நீங்கள் வாக்களிக்க முடியுமாவதற்கு முன், உங்கள் பெயர் வாக்காளர் பட்டியலில் இருத்தல் அவசியம். வாக்காளர் பட்டியல் என்பது ஃபெடரல் தேர்தல்களிலும், கருத்துக்கணிப்பீடுகளிலும் வாக்களிக்கப் பதிவுசெய்துள்ள தகுதிபெற்ற பிரஜைகளின் பெயர்ப் பட்டியலாகும்.

### என் பெயரைப் பதிவு செய்ய இயலுமா?

பின்வருவன உங்களுக்குப் பொருந்துமாயின் சட்டத்தின்படி நீங்கள் பதிவு செய்ய வேண்டப்படுகிறீர்கள்:

- 18 அல்லது அதற்கு மேற்பட்ட வயதுடையவர்
- ஒரு ஆஸ்திரேலியப் பிரஜை
- உங்கள் தற்போதைய முகவரியில் குறைந்தது ஒரு மாதம் வசித்திருத்தல்

நீங்கள் 16 அல்லது 17 வயதுடையவராயின் தற்போது பதிவு செய்யலாம், பின்பு 18 வயதாகும் போது வாக்களிக்கத் தயாராயிருப்பீர்கள்.

### நான் எவ்வாறு பதிவு செய்வது?

www.aec.gov.au/enrol என்ற வலைத்தளத்தில் நீங்கள் பதிவு செய்யலாம்.

ஒரு AEC காரியாலயத்திற்கு அல்லது ஆஸ்திரேலியத் தபால் கிளைக்குச் சென்றும் பதிவு செய்வதற்கான விண்ணப்பப் படிவத்தைப் பெற்றுக் கொள்ளலாம்.

### நான் பதிவு செய்துள்ளேனா என்று சரியாகத் தெரியாது

www.aec.gov.au/check என்ற வலைத்தளத்தில் உங்கள் பதிவை நீங்கள் சரிபார்க்கலாம்.

### எனது முகவரியை / பெயரை நான் மாற்றியிருந்தால் என்ன செய்ய வேண்டும்?

உங்களது வதிவிடத்தினை அல்லது பெயரை மாற்றுகின்ற ஒவ்வொரு தடவையும் உங்களது பதிவிலுள்ள உங்கள் விபரங்களை புதுப்பித்தல் வேண்டும். www.aec.gov.au எனும் வலைத்தளத்திற்குச் சென்றும் உங்களது விபரங்களை மாற்றலாம். ஒரு AEC காரியாலயத்திற்கு அல்லது ஆஸ்திரேலியத் தபால் கிளைக்குச் சென்றும் பதிவு செய்வதற்கான விண்ணப்பப் படிவத்தைப் பெற்றுக் கொள்ளலாம்.

### நான் வெளிநாடு செல்வதாயின் என்ன செய்ய வேண்டும்?


நீங்கள் தொழில் நிமித்தம் அல்லது வசிப்பதற்காக வெளிநாடு செல்வதாயின், அதனை AEC -இற்குத் தெரிவிக்க வேண்டும். நீங்கள் வெளிநாடொன்றில் இருக்கும்போது ஒரு தேர்தல் அல்லது கருத்துக்கணிப்பு வாக்கெடுப்பு அறிவிக்கப்பட்டாலும் உங்கள் நிலை பற்றி நீங்கள் AEC-இற்கு அறிவிக்க வேண்டும்.

அவ்வாறு தெரிவிக்காவிடின், வாக்காளர் பட்டியலிலிருந்து உங்கள் பெயர் அகற்றப்படக்கூடும் அத்துடன் எதிர்வரும் தேர்தல்களின்போது வாக்களிக்கும் சந்தர்ப்பத்தை நீங்கள் இழக்கவும் கூடும்.

மேலதிக விபரங்களுக்குச் செல்க: www.aec.gov.au/overseas.

## வாக்களிப்பு

ஒரு ஃபெடரல் தேர்தலானது குறைந்தது ஒவ்வொரு மூன்று வருடங்களுக்கு ஒரு முறை இடம்பெறுவதோடு, அது எப்போதும் ஒரு சனிக்கிழமையிலேயே இடம்பெறும். இதில் நீங்கள் எங்கே எப்போது வாக்களிப்பது என்பது பற்றிய விபரம் அத்தேர்தல் தினத்தன்று நீங்கள் எங்குள்ளீர்கள் என்பதைப் பொறுத்ததாகும்.



மாதிரி வாக்குச் சீட்டுகள்

### தேர்தல் தினத்தன்று

நீங்கள் உங்களது சொந்த மாநிலத்திலுள்ள அல்லது பிராந்தியத்திலுள்ள எந்தவொரு வாக்களிப்பு நிலையத்திலும் வாக்களிக்க முடியும். வாக்களிப்பு நிலையங்கள் மு.ப. 8 மணிக்குத் திறக்கப்பட்டு சரியாக பி.ப. 6 மணிக்கு மூடப்படும்.

நீங்கள் தேர்தல் தினத்தன்று பிறிதொரு மாநிலத்தில் அல்லது பிராந்தியத்தில் இருந்து, நீங்கள் முன்னதாகவே வாக்களிக்கவில்லையாயின், நீங்கள் இருக்கும் மற்ற மாநிலத்தில் உள்ள வாக்களிப்பு நிலையம் ஒன்றிற்குச் சொன்று வாக்களிக்க வேண்டும்.

வாக்களிப்பு நிலையங்கள் மற்றும் இதர மாநிலங்களிலுள்ள வாக்களிப்பு நிலையங்கள் பற்றிய விபரப் பட்டியலை தேர்தலுக்கு ஒரு சில வாரங்களுக்கு முன்பிலிருந்து www.aec.gov.au என்ற வளைத்ததளத்தில் பெறலாம்.

### ஏனைய தெரிவுகள்

தேர்தல் தினத்தன்று நீங்கள் பின்வரும் நிலையில் இருப்பீர்களாயின் நேரடியாகவோ அல்லது தபால் மூலமோ நீங்கள் முன்கூட்டியே வாக்களிக்கலாம்:

- நீங்கள் வாக்களிக்கப் பதிவு செய்துள்ள தேர்தல் தொகுதிக்கு வெளியே இருத்தல்
- வாக்களிப்பு நிலையமொன்றிலிருந்து 8 கிலோ மீட்டருக்கும் அதிக தொலைவில் இருத்தல்
- பிரயாணத்தில் இருத்தல்
- வேலைத்தளத்திலிருந்து வாக்களிக்கச் செல்ல முடியாதிருத்தல்
- கடும் சுகயீனம், வயது முதிர்ச்சி அல்லது விரைவில் பிரசவம் ஏற்படும் நிலையில் (அல்லது அத்தகைய ஒருவரைப் பராமரிக்கும் நிலையில் இருத்தல்)
- வைத்தியசாலை ஒன்றில் நோயாளியாக இருந்து அங்கு வாக்களிக்க இயலாத நிலையில் இருத்தல்
- வாக்களிப்பு நிலையமொன்றிற்குச் செல்வதைத் தடுக்கக் கூடிய மத நம்பிக்கைகளைக் கொண்டிருத்தல்
- மூன்று வருடங்களுக்குக் குறைவான சிறைத் தண்டனையை அனுபவித்துக் கொண்டிருத்தல் அல்லது தடுப்புக் காவலிலிருத்தல்
- அனாமதேய வாக்காளராக இருத்தல்
- உங்கள் பாதுகாப்பு பற்றி காரணத்தோடு கூடிய அச்சம் இருத்தல்

வரவிருக்கின்ற தேர்தல் தினத்தையண்டிய வாரங்களில், முன்கூட்டியே வாக்களிக்கும் நிலையங்கள் திறந்திருக்கும். அவை அமைந்துள்ள இடங்கள் மற்றும் இயங்கும் நேரங்கள் போன்ற விபரங்களை www.aec.gov.au -இல் பெறமுடியும்.

தபால் மூலம் வாக்களிக்க நீங்கள் இணைய வழியில் விண்ணப்பிக்கலாம் அல்லது தபால் மூலமான வாக்களிப்பு விண்ணப்பப் படிவமொன்றை AEC காரியாலயமொன்றிலிருந்து பெற்றுக் கொள்ளலாம். தேர்தல் வேட்பாளர்கள் முடிவுசெய்யப்பட்டதன் பின் உங்கள் தபால் மூலமான வாக்களிப்புப் பொதியை AEC தபாலில் உங்களுக்கு அனுப்பி வைக்கும்.

## உங்களது வாக்கினைக் கணக்கிடல்

ஃபெடரல் தேர்தல் ஒன்றில், அவுஸ்திரேலியப் பாராளுமன்றத்தின் இரண்டு சபைகளில் உங்களது பிரதிநிதிகளைத் தெரிவுசெய்வதற்காக நீங்கள் வாக்களிக்கின்றீர்கள். 'பிரதிநிதிகள் சபை' மற்றும் 'செனட் சபை' என்பனவே அவ்விரண்டு சபைகளுமாகும்.

உங்களுக்கு இரண்டு வாக்குச்சீட்டுகள் கொடுக்கப்படும்:

- இதில் பச்சை நிற வாக்குச் சீட்டானது 'பிரதிநிதிகள் சபை'க்கு உங்களது உள்ளூர்ப் பிரதேசத்திற்கான (அல்லது தேர்தல் தொகுதிக்கான) பிரதிநிதி ஒருவரைத் தெரிவுசெய்வதற்கும், மற்றும்
- வெள்ளை நிற வாக்குச்சீட்டானது 'செனட் சபை'க்கான உங்களது மாநில அல்லது பிராந்தியப் பிரதிநிதி ஒருவரைத் தெரிவுசெய்வதற்குமாகும்.

எவ்வாறு வாக்களிப்பது என்பது பற்றிய அறிவுறுத்தல்கள் வாக்குச்சீட்டுக்களில் அச்சிடப்பட்டிருக்கும். வாக்குச் சீட்டில் நீங்கள் ஏதேனும் தவறு செய்துவிட்டால் அல்லது அதில் என்ன செய்வதென்று உங்களுக்குத் தெரியவில்லையென்றால் உதவிக்கு வாக்களிப்பு நிலைய அதிகாரி ஒருவரை நாடவும்.

## மேலதிக தகவல்கள் வேண்டுமா?

தேர்தல் முறைமை, வாக்களிக்கப் பதிவு செய்தல் மற்றும் எவ்வாறு வாக்களிப்பது என்பன பற்றிய தகவல்களை www.aec.gov.au இல் அறிந்து கொள்ளலாம்.

தொலைபேசி மூலமான உரைபெயர்ப்பு சேவைகள் கிடைக்கும். வாக்களிக்கப் பதிவு செய்தல், வாக்களித்தல் மற்றும் தேர்தல்கள் பற்றிய தகவல்களை தமிழ் மொழியில் பெற நீங்கள் அழைக்க வேண்டிய இலக்கம் 1300 720 153.

நீங்கள் ஒரு செவித்திறன் அற்றவராக அல்லது செவிப்புலக் குறைபாடுடையவராக அல்லது பேச்சுச் சிரமம் உடையவராக இருந்தால், 'தேசிய தொடர்பாடல் சேவை' (National Relay Service -NRS) மூலம் எங்களுடன் தொடர்பு கொள்ளவும்.

- TTY பாவனையாளர்கள் 13 36 77 -ஐ அழைத்து 13 23 26 -இற்குத் தொடர்பினை வேண்டவும்.
- பேச்சு மற்றும் செவிப்புலன் மூலமான பாவனையாளர்கள் (Speak and Listen) 1300 555 727 -ஐ அழைத்து 13 23 26-இற்குத் தொடர்பினை வேண்டவும்.
- இணைய தொடர்பாடல் பாவனையாளர்கள் NRS சேவையுடன் தொடர்புகொண்டு 13 23 26 -இற்குத் தொடர்பினை வேண்டவும்.

www.aec.gov.au 13 23 26

AEC Australian Electoral Commission

18_0993

Authorised by the Electoral Commissioner, Canberra.